# சிவகங்கை நகராட்சி

## சாதாரணக்கூட்டம்

2019ம் ஆண்டு ஜீலை 31ம் நாள் விகாரி வருடம் ஆடி 15ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**
**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**சிவகங்கை நகராட்சி.**

# <u>பொருள்கள்</u>

**1.**சிவகஙகை நகராட்சி ஆணையாளர் அவர்களின் **2019** ஆம் ஆண்டு ஜீலை மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:**420

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

2. சிவகஙகை நகராட்சி பொறியாளர் அவர்களின் **2019** ஆம் ஆண்டு ஜீலை மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:**421

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

3. சிவகஙகை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புற நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019ன் கீழ் ரூ.1,00,00,000/– மதிப்பீட்டில், தார்த்தளம் மற்றும் வாறுகால் அமைக்கும் பணிக்கு (சிப்பம்–2), 03.01.2019 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு. கே.ஆர்.ராஜா, ஒப்பந்ததாரர் – 0.40 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
2. திருமதி. பி.அனுராதா, ஒப்பந்ததாரர் – 27.77 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
3. திரு.பி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் – 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
4. திரு.கே.ஓ.பெரியகருப்பன், ஒப்பந்ததாரர்– 19.22 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
5. திருவாளர்கள். A.P.R.V.K & கம்பெனி – 7.88 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.

<u>அலுவலகக் குறிப்பு</u> –

1. இப்பணிக்கு நகர்மன்றம் தனது 09.07.2018 தேதியிட்ட 299ம் எண் தீர்மானத்தில் ரூ.1,00,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 27.77 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திருமதி.பி.அனுராதா அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

   **தீர்மான எண்:**422

   **தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

4. சிவகஙகை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புற நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019ன் கீழ் ரூ.1,00,00,000/– மதிப்பீட்டில், தார்த்தளம் மற்றும் வாறுகால் அமைக்கும் பணிக்கு (சிப்பம்–1), 03.01.2019 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. கே.ஆர்.ராஜா, ஒப்பந்ததாரர் | 27.27 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| 2. | திருமதி. பி.அனுராதா, ஒப்பந்ததாரர் | 0.95 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| 3. | திரு.பி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் | 19.52 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| 4. | திரு.கே.ஓ.பெரியகருப்பன், ஒப்பந்ததாரர் | 0.11 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |

அலுவலகக் குறிப்பு –

1. இப்பணிக்கு நகர்மன்றம் தனது 09.07.2018 தேதியிட்ட 299ம் எண் தீர்மானத்தில் ரூ.1,00,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 27.27 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திரு.கே.ஆர்.ராஜா அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மான எண்:**423

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

5. சிவகஙகை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் ஏற்படுததப்படும் உப விதிகளின் படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 ( 28 A ) மற்றும் 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12 ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை எடுத்து செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன இந்நகராட்சியில் தடை செய்யப்பட்டு அதற்கென தண்டனைகள் மற்றும் அபராதத்தொகை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கென செயலாக்க மேல்முறையீட்டு அதிகாரி நகராட்சி ஆணையாளரே என்ற அறிவிப்பு வெளியிடப்படுகிறது. சிவகஙகை நகராட்சியின் இந்த துணை விதிகள் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் நாளிதழில் வெளியிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொதுமக்கள் சிவகஙகை நகராட்சி ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமையாளர்களுக்கு தெரிவிக்க மாலைமுரசு நாளிதழில் வெளியிடப்பட்டதற்கு தொகை ரூ.9660/– ஐ மேற்கண்ட நாளிதழிக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>..–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்படி தொகை வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:**424

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி ஆணையரின் நிரந்திர முன்பணம் (Re requirement payment advance) ரூ.1000/– வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:**425

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

7.அரசு ஆணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை நாள்..11.10.2012 2) அரசு ஆணை எண்..158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள்..11.11.2002 3)இணை இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை குறுந்தகவல் செய்தி நாள்..24.06.2019 4)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்..15415/ 2013/கு.வ1 நாள்..12.07.2019ம் தேதிய கடிதஙகளின் படி இந்நகராட்சி எல்லைப் பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறதா என கண்டறியவும், மழைநீர் தொட்டி அமைக்காத வீடுகளை கண்டறிந்து மழைநீர் தொட்டி அமைக்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இவ்வலுவலக செயல்முறை கடித ந.க.எண்..601/2019/சி4 நாள்..19.07.2019ம் தேதிய உத்தரவில் களப்பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. களப்பணியாளர்களுக்கு தேவையான விளம்பர அறிவிப்பு நோட்டீஸ் 15 ஆயிரம் எண்ணமும், மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் 10 ஆயிரம் எண்ணமும் பொது மேலாளர் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சஙகம் திருச்சி நிறுவனத்திடமிருந்து அச்சடித்து வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ஒரு இலட்சம்) மட்டும் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

அவசர அவசியம் கருதி மழைநீர் சேகரிப்பு விளம்பர அறிவிப்பு நோட்டீஸ் 15ஆயிரம் எண்ணமும், மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் 10 ஆயிரம் எண்ணமும் வாங்க மன்றம் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ஒரு இலட்சம்) மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மான எண்:**426

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

8. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு ஓட்டுநர் திரு. து.கோபால், வயது முதிர்வின் காரணமாக 31.07.2019ல் ஓய்வு பெற உள்ளார். அன்னாருக்கு சிறப்பு சேமநலநிதி நகராட்சி பஙகுத் தொகை ரூ.10,000/– வழஙக மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் முன் அனுமதி வழஙக நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**தீர்மான எண்:**427

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

9. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் சுய உதவி குழுக்களான 1. முக்கனி சுயஉதவிக் குழு 2. செம்பருத்தி சுயஉதவிக்குழு 3. மல்லிகை சுய உதவிக்குழு ஆகிய மூன்று தனியார் சுயஉதவி குழுவின் மூலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. ஆர்.தீபக் த/பெ.ராஜேந்திரன் என்பவர் தன்னை பணி நிரந்தரம் செய்யக்கூறி மதுரை தொழிலாளர் நிதி மனறத்தில் தொடர்ந்த வழக்கு எண்..ஐ.டி.எண் 48/2018ல் நகராட்சி தரப்பு வாதஙகளை கேட்காமல் ஒரு தலை பட்சமாக மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழஙகப்பட்டது. மேற்படி தீர்ப்பின் பேரில் திரு. தீபக் த/பெ. ராஜேந்திரன் என்பவர் தனக்கு பணி வழஙகவும், பணி நீக்க காலத்திற்குரிய ஊதியத்தை வழஙக கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் தொடந்த வழக்கு எண்..டபிள்யூ.பி (எம்.டி) எண..14688 /2019 எண்ணிட்ட வழக்கில் மனுதாரது விண்ணப்பத்தினை நகராட்சி சட்ட விதிகளுக்குட்பட்டு எட்டு வார காலத்திற்குள் பரிசீலனை செய்யுமாறு பெற்ற தீர்ப்பில் நகராட்சி சார்பில் மேல்முறையீடு செய்யவும், மேல்முறையீட்டு வழக்கிற்கு தேவையான வக்காலத்து படிவம் மற்றும் பத்தி வாரி அறிக்கை தயார் செய்து வழக்கை நடத்திச் செல்ல சென்னை உயர்நீதி மன்ற மதுரை பலகை நகராட்சி வழக்கறிஞர் ஜே.லாரன்ஸ் அவர்களின் 23.07.2019ம் தேதிய கடிதத்தின் படி வழக்கு கட்டணமாக ரூ.7500/– (ஏழாயிரத்து ஐந்நூறு) மட்டும் வழக்கறிஞர் ஜே.லாரன்ஸ் அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

சென்னை உயர்நீதி மன்ற மதுரை பலகை நகராட்சி வழக்கறிஞர் திரு.ஜே. லாரன்ஸ் அவர்களின் கடிதத்தின் படி வழக்கு கட்டணம் ரூ.7500/– (ஏழாயிரத்தி ஐந்நூறு) மட்டும் வழஙக மன்றம் ஒப்புதல் வழஙகலாம். அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழஙகியமைக்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மான எண்:**428

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

10. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்..44555/2013/P3 நாள்..28.02.2019ன் படியும் அரசாணை நிலை (எண்) 84 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்..25.06.2018ன் படியும் ஒரு முறை பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேகரித்தல், வழஙகுதல் கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்து துணை விதிகள் இயற்றப்பட்டு அதன் அடிப்படையில் துணை விதிகளை மீறி செயல்படுபவர்களுக்கு 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 306 ( 28 A ) ன் கீழ் அபராதக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு இந்நகர் மன்றத் தீர்மான எண்..372 நாள்..28.02.2019ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 06.06.2019ம் தேதிய மாலை முரசு நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே மேற்கண்டபடி 4(நான்கு) பக்கஙகள் கொண்டு (23PX16P) துணை விதிகளை மாவட்ட

அரசிதழில் வெளியிட ஒரு பக்கத்திற்கு ரூ.2100/— வீதம் 4 பக்கங்களுக்கு ரூ.8400/— (எட்டாயிரத்தி நாநூறு) அரசு எழுதுபொருள் அச்சுத் துறைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின் படி தொகை வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:429**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**11.** சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயஙகி வரும் வாகனம் TN63AP4380 காம்பக்டர் வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 2019—20ம் ஆண்டிற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் FC புகைசான்று, ஸ்பீடா மீட்டர் சான்று, சிவப்பு மஞ்சள் நிற ஸ்டிக்கர் ஆகியவைகள் திரு. மா.சுரேஷ்குமார், ஓட்டுநரால் எடுக்கப்பட்டு சான்றுகள் மற்றும் ரசீதுகள் பெறப்பட்டு இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவு தொகையான FC Fees ரூ.1100/— புகைச் சான்று ஸ்பீடா மீட்டர் சான்று ரூ.800/—, சிவப்பு மஞ்சள் நிற ஸ்டிக்கர் ரூ.1400/— சேர்த்து மொத்தம் ரூ.3300/—ஐ திரு. மா.சுரேஷ்குமார், ஓட்டுநரால் செலவு மேற்கொள்ளப்பட்டது எனவும், மேலும் செலவினத் தொகையை மேற்படியாருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:430**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**12.** சிவகஙகை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்தல், சேமித்து வைத்தல் உற்பத்தி செய்தல், பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 ( 28 A ) மற்றும் 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12 கீழ் தண்டணைகள் மற்றும் அபராதத் தொகை வகைப்படுத்தப்பட்டு இதன் தொடர்பாக பொது மக்களிடம் ஆட்சேபனைகள் கேட்டு கடந்த 06.06.2019ம் தேதிய மாலை முரசு நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டதில் இது நாள் வரை எவ்வித ஆட்சேபனைகளும் வரப்பெறாததால் இந்த துணை விதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:431**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**13.** சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 27 வார்டுகளிலும் உள்ள பகிர்மான குழாய்கள் மற்றும் இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சிவகஙகை நகராட்சி வரை உள்ள பிரதான குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் கசிவுகள், உடைப்புகள் மற்றும் அடைப்புகள் சரிசெய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:432**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**14.** சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வளாகத்தில் மானாமதுரை மார்க்கத்தில் உள்ள பழுதடைந்த கடைகளை பராமரிப்பு பணிகள் செய்து கலர் வண்ணம் பூசி கொடுக்கவும்

மற்றும் ஏற்கனவே உள்ள 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டியை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக 1000 லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி 4 எண்ணிக்கை வைத்து கொடுக்கும் பணிக்கு ரூ.6.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழஙகலாம்.
2. மேற்படி பணியை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019—20 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:433**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**15.** சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சீரான முறையில் குடிநீர் வழஙகுவதற்கு ஏதுவாக பகிர்மான குழாய்கள் இல்லாத இடஙகளில் 90mm PVC பைப் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழஙகலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019—20 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:434**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**16.** சிவகஙகை நகராட்சிக்கு சொந்தமான இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள போர்வெல் மோட்டார்கள், IUDM திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்படும் 2 போர்வெல் மோட்டார்கள் ஆகியவை திறப்பதற்கும் மற்றும் தண்ணீர் திறப்பதற்கு தினக்கூலி அடிப்படையில் 5 பணியாளர்கள் சப்ளை செய்யும் பணிக்கு 16.07.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. எம்.நாட்டரசன், ஒப்பந்தாரர் சிவகஙகை. | ரூ.340/— (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) |
| 2. | திரு. பி.முருகன், ஒப்பந்தாரர், சிவகஙகை. | ரூ.350/— (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் (ரூ.340/— நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) வழஙகிய திரு.எம். நாட்டரசன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**தீர்மான எண்:435**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**17.** சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் மொத்தம் 2366 எண்ணிக்கை தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாளது தேதியில் இரண்டு மாத காலத்திற்கு மட்டும் பயன்படுத்துவதற்குரிய மின் உபகரணஙகளே உள்ளது. தெருவிளக்குகள் சரிவர எரிவதில்லையென தொடர்ந்து புகார்கள் வருகிறது. மேலும் மாவட்ட தலைநகராமாக உள்ளதால் எரியாத தெருவிளக்குகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. ஏனவே 2019—2020ம் ஆண்டிற்கு ஆறு மாத காலத்திற்கு தேவையான மின் உபகரணஙகளை வாஙக ஆகும் செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழஙகலாம்.
2. மேற்கண்ட பணியானது தெருவிளக்கு சம்மந்தப்பட்ட அத்தியாவசிய பணியென்பதால் அரசு அனுமதி பெற்ற நிறுவனமான The Madurai district Pandian consumers co operative whole sale store Ltd நிறுவனத்திடம் நேரடியாக விநியோகித்துக் கொள்ள தனி அலுவலர் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:436**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**18.** வறட்சி நிவாரணப் பணிகள் 2019ன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..1,8,9,12,16,18,20,21,27 மற்றும் இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள 10 ஆழ்த்துளைக் கிணறுகள் சுத்தம் செய்தல் பணிக்கு 12.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. பி.முருகன், ஒப்பந்தகாரார், சிவகஙகை | 0.13% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு. என்.மாரியப்பன், ஒப்பந்தகாரார், சிவகஙகை | 1.96% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.13% குறைவான விலை விகிதம் வழஙகிய திரு. பி.முருகன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது குடிநீர் சம்மந்தப்பட்ட அத்தியாவசிய பணியென்பதால் பணியின் அவசரம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திரு. பி.முருகன் அவர்களுக்கு வேலை உத்தரவு வழஙகியதை தனி அலுவலர் ஏற்கலாம்.

**தீர்மான எண்:437**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**19.** வறட்சி நிவாரணப் பணிகள் 2019ன் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..1,8,9,12,16,18,20,21, மற்றும் 27 ஆகிய பகுதிகளில் உள்ள 10 ஆழ்த்துளைக் கிணறுகள் பராமரிப்பு மற்றும் புதிதாக மோட்டார் மாற்றுதல் பணிக்கு 12.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. பி.முருகன், ஒப்பந்தகாரார், சிவகஙகை | 2.87% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம். |
| 2. | திரு. எம். நாட்டரசன், ஒப்பந்தகாரார், சிவகஙகை | 0.18% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.18% குறைவான விலை விகிதம் வழஙகிய திரு.எம். நாட்டரசன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது குடிநீர் சம்மந்தப்பட்ட அத்தியாவசிய பணியென்பதால் பணியின் அவசரம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திரு. எம்.நாட்டரசன் அவர்களுக்கு வேலை உத்தரவு வழஙகியதை தனி அலுவலர் ஏற்கலாம்.

**தீர்மான எண்:438**

**தீர்மானம்..** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி